**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 200 / 2021**

**வா.சா.1 – முனியாண்டி** **12.02.2025**

1, 2 **பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :-

தாவா சொத்தின் சர்வே எண் 235/4 ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் 5 1/2 செண்டு ஆகும். தாவா சொத்தின் மேற்கே சர்வே எண் 235/3 உள்ளது. சர்வே எண் 235/3 யார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. சர்வே எண் 235/3 மற்றும் 235/4ல் ஒரு பகுதியும் சேர்த்து எனது தகப்பனார் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் சர்வே எண் 235/4ல் தான் கிரையம் வாங்கினார். எனது தகப்பனார் 5 1/2 செண்டு நிலத்தை கிரையம் வாங்கினார் எனது தகப்பனார் 4 3/4 செண்டு தான் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 தான் எனது தகப்பனார் கிரையம் வாங்கிய கிரைய பத்திரம் என்றால் சரிதான். 531 குழியில் பாதி குழி 251 3/4 குழி கிரையம் வாங்கியதாக வா.சா.ஆ.1 ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1948ல் எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்தை சுற்றி எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து இருந்ததா என்றால் இல்லை. எனது தகப்பனார் கிரையம் வாஙகிய சொத்து எனக்கும் எனது சகோதரருக்கும் 1968ல் இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார். அந்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் தான் வா.சா.ஆ.2 ஆகும். வா.சா.ஆ.2ல் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை தவிர எனது தகப்பனாருக்கு வேறு சொத்துக்கள் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 251 3/4 குழிக்கு செண்டு 4 3/4 எனக் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண் 130/2 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னர் நத்தம் நில வரி திட்டத்தில் உரிமையின் அடிப்படையிலும் அனுபவத்தின் அடிப்படையிலும் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 4 3/4 செண்டில் எனக்கு

பகுதி பாத்தியம் என்றால் சரிதான். எனக்கு பாத்தியமாகி எனது அனுபவத்தில் இருந்த சொத்திற்கு புல எண் 235/3 என என் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. புல எண் 235/3க்கு 30.06.1992 தேதியில் வாதியின் பெயரில் ஏற்பட்ட மனைவரி தோராய பட்டா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்குரிய 2.30 செண்டிற்கு என் பெயரில் புல எண் 235/3 க்கு பட்டா வழங்கியதை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்றும் அதை மறைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராது நான்காவது பாராவை தவிர மற்ற பாராக்களில் நான் தான் சொத்தை பராமரித்ததாகவும் குடும்பத்தை பராமரித்ததாகவும் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 235/4ல் கூடுதலாக உள்ள பரப்பளவை குறித்து வழக்கிட எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 235/4க்கு எனது சகோதரர் இராமநாதனுக்கு அனுபவத்தின் அடிப்படையில் பட்டா வந்துள்ளது என்றும் எனது தந்தையின் வாரிசு என்ற அடிப்படையில் பட்டா வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து உள்ள பகுதியில் சொத்தின் மதிப்பு கூடிவிட்டதால் பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யாமல் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்த வழக்கு தவறானது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கிடையே ஏற்பட்ட ஆவணங்களை செல்லத்தக்கதல்ல எனக் கோர எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழக்கின் செலவுத்தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 வீட்டு வரி

ரசீதிற்கும் இந்த தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**